RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1630

# மேச்சேரி ஸ்ரீபத்ரகாளியம்மன் திருக்கோயில் தோற்றமும் வழிபாட்டு முறைகளும்

**ந. கவிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா

# Mecheri Shri Pathirakaliyamman Temple's Origin and Cults

**N. Kavitha** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem- 636011, Tamil Nadu, India

* Corresponding Author: kavithashobika2002@gmail.com

Received: 03-06-2022
Revised: 17-09-2022
Accepted: 11-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Men who wandered as a nomad reaches the present civilized human society only after various evolutions. Before reaching the current civilization, men lived his life based on nature. After that men marveled at the powers of nature and so they started worshiping nature to protect himself from its wrath and destruction. Later they started worshiping nature by giving a particular shape for it. Then the people thought that every town must have a temple and it can be proved through a proverb "Don't live in a temple less town'. They believed that if good happens it is God's grace and if evil happens it is God's anger. They worship their deities with faith and fear. This article puts forth the worship of Shri Pathirakaliyamman temple.

**Keywords:** Worship, Mecheri, Civilization, Pathirakaliyamman Temple.

## முன்னுரை

நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்த மனிதன் பல்வேறு பரிணாமங்களை அடைந்த பின்னரே இன்றைய நாகரிக நிலையை அடைந்துள்ளான். இன்றைய நாகரிக நிலையை அடைவதற்கு முன்னர் இயற்கையைச் சார்ந்த தனது வாழ்க்கையை நடத்தி வந்தான். அதன் பின்னர் இயற்கையின் சக்திகளைக் கண்டு வியந்து மனிதன் அதன் சீற்றத்தில் இருந்தும் அதன் பேரழிவிலிருந்தும் தன்னையும் தன் சமுதாயத்தையும் காத்துக் கொள்ள நினைத்து அவ்வியற்கையை வழிபட ஆரம்பித்தான். காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இவ்வாறாக மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பின்னர் ஒவ்வொரு ஊரிலும் கோயில் அவசியம் இருக்க வேண்டும் எனும் மனநிலைக்கு மக்கள் வந்துள்ளனர். இதனை 'கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியின் வழி அறிந்துகொள்ள முடிகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்பினர். நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர். இவ்வகையில் பத்ரகாளியம்மன் கோயில் வழிபாட்டு முறைகளும் அமைகின்றன.

## மேச்சேரி பெயர்க்காரணம்

சேலம் மாவட்டத்தில் மேற்கு திசையில் சேலம் மேட்டூர் அணை நெடுஞ்சாலையில் சேலத்தில் கீழ்த்திசையில் மேட்டூர் அணையிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் மேச்சேரி என்னும் இவ்வூர் அமைந்துள்ளது.

மேச்சேரி என்னும் கிராமம் தெளிந்த நீர் நிறைந்த ஏரியுடன் கூடிய பசுமையான புல்வெளி நிறைந்த பகுதியாக இருந்ததால் இங்குப் புல்வெளிகள் அதிகம் காணப்படும். இந்த புல்வெளியில் ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாகவும் அமைந்துள்ளது. எனவே இக்கிராமம் மேய்ச்சல் + ஏரி எனும் பொருள் நிலையை உணர்த்தும் பொருட்டு மேய்ச்சல் ஏரி என்றாகிப் பின்னர் மருவி மேச்சேரி என்றாயிற்று.

## ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் தோற்றம் வளர்ச்சி

மானாமதுரை என்ற ஊரில் காளியம்மன் என்ற கோவில் இருந்தது. அந்த கோவில் பழுது அடைந்த நிலையில் இருந்தது. அந்த காளியம்மன் கோவில் சில நாட்களில் இடிந்தது. கோவில் பூசாரிகள் கோவில் இடிந்ததை நினைத்து அழுத நிலையில் இருந்தனர். அப்போது ஒருவர் நிலையில் வந்த அம்மன் அவர்களிடம் உங்கள் குலதெய்வம் கோவில் வடக்கு திசையை நோக்கிச் சென்று உள்ளது என்று கூறிவிட்டு அம்மன் சென்றது.

இதனால் கோவில் பூசாரி கோவிலில் பயன்படுத்தப்படும் மணி தட்டுகளையும் அவர்கள் செய்த மண்பாண்டம் கல்லு பலகைகளையும் கூடையில் வைத்துக் கொண்டு தங்களின் மகன்களைக் கூட்டிக் கொண்டு வழியில் உணவுக்காக வீட்டில் இருந்த அரிசி கருபிட்டி, வெல்லம் தேங்காய்களை எடுத்துக்கொண்டு மகன்களோடு சென்றனர். இவர்களின் மகன் ஐந்து பேர்கள், 1. சின்னகாளி, 2. பெரியகாளி, 3. முத்துகாளி, 4. மதுரகாளி, 5. செம்புகாளி. 5 பேர்கள் சேர்ந்து கூடையை வைத்து வடக்கு திசையை நோக்கி சென்றனர்.

சாமியைத் தேடி சென்ற போது வழியில் இளைப்பாறக் கூடையை இறக்கி வைத்து அதில் இருந்த அரிசியை ஊர வைத்து அதன் உடன் கருப்பட்டி வெல்லம் சேர்த்து தேங்காய் கீத்து போட்டு இவைகளுடன் மணி தட்டுகளை வைத்து கல்லு பலகை வைத்து வணங்கினர். அந்த வனத்தில் சில மாடுகள் மேய்வது வழக்கம். அங்கு அந்த பகுதியில் காரா பசுவை சேர்ந்த பசு மேய்ந்து கொண்டு இருந்தது. இந்த பசு வெள்ளார் அருகில் உள்ள சோழியானூர் சேர்ந்த வேளாளர் குழுகவுண்டர் குடும்பம் சேர்ந்த வீட்டுப் பசுமாடு இது. இந்த பசு வழக்கம் போல் புத்து உள்ள வனப்பகுதியில் மேய்ப்பது வழக்கம். இந்த காரா பசுவை மாலை நேரம் வீட்டிற்கு சென்று பால் கறக்கும் நேரத்தில் அந்த பசுவின் மடியில் இருந்து பால் வருவதில்லை. இது அறிந்து வேளாளர் கவுண்டர் மாடு மேய்ப்பவனை அழைத்து அவரிடம் மாடு பால் கறக்கும் போது பால் வரவில்லை. இதனை நீ மாடு உடன் சென்று மேயும் இடத்தை பார்வை இடச் சொன்னார்.

ஒருநாள் காலை முதல் மாலை வரை அதனைப் பார்வை இடும்போது மாலை நேரத்தில் பசு அங்கு உள்ள வனப்பகுதியின் புத்து நோக்கிச் சென்றது. அந்த புத்தில் காராமாடு பசுத் தானாகவே பாலை அதுவே கறந்துவிட்டு சென்றது. இதனைக் கண்ட மாடு மேய்ப்பவன் மாட்டைக் கூட்டிச் சென்று சோழியானூர் கவுண்டர் இடம் மாடு அங்கு உள்ள புத்தில் தானாகவே பாலை கறந்ததைக் கண்டேன். நீங்கள் என் மீது சந்தேகம் பட வேண்டாம். ஒருநாள் பசு உடன் சென்று பாருங்கள் என்று சொன்னான். கவுண்டர் அங்குச் சென்று பார்வை இட்டார். அங்கு உள்ள பூசாரியிடம் இப்படி எத்தனை நாளாக நடக்கிறது என்றார்.

அந்த பூசாரி மாடு கன்று ஈன்றதில் இருந்து இது நடக்கிறது என்றார். அங்கு வந்த சாமியார் புத்திற்கு சிலை வைத்து மண்டவம் கட்டினார். வடதிசையை நோக்கி சாமி வந்ததால் அதற்கு வடபத்திர காளியம்மன் என்று பெயர் சூட்டப்பட்டது. இவர்களின் மூத்த மகனை வழக்கம் போல் பூஜை செய்ய சொன்னார். மற்ற நான்கு பேர்களை நான் திசையில் பிழைப்பதற்காக அனுப்பி வைத்தார். கோவிலில் சாமிக்கு இரு காலமும் காலை மாலையில் பூஜைகளைச் செய்து ஐந்து முக விளக்கில் நெய் தீபம் ஏற்றிப் பொங்கல் வைத்து பூஜை செய்ய வேண்டும். உங்கள் குடும்பங்களில் மூத்த மகனாகப் பிறக்கக் கூடியவன் அவன் பூணூல் அணிந்து இந்த நித்திய பூஜையைச் செய்ய வேண்டும். இந்த பூஜையைச் செய்யாமல் விட்டால் புத்திற்கு பால் கொடுத்த காரம் பசுவை கொன்றதற்குச் சமம் என்று சொன்னார் (Kandasamy, 2022, Age 37, Personal Interview, Chennai, India.).

## புதிய கோவில் தோன்றிய வரலாறு

இவ்வாலயம் நாளுக்கு நாள் பிரசித்து பெற்று வருவதும் மக்கள் வழிபாடு பல்கிப் பெருகுவதும் கண்டு மொட்டைக் கோபுரத்தை இடித்துவிட்டு 70 அடிக்குப் பெரிய ராஜகோபுரம் அமைக்கப் பக்த கோடிகளும் பரம்பரை தர்மகர்த்தாக்களும் விரும்பினார். 1999 இல் இருந்து சமய அறநிலையத்தாருடன் கலந்து ஆலோசித்து ராஜகோபுரத் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது. நான்கு ராஜகோபுரம் மூலவர் கருவறைக் கல்மண்டபம், இளைப்பாற்றி மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம் என முற்றிலும் புதிய அமைப்பில் பழைய ஆலயத்தை அகற்றி புதிய ஆலயம் 6 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பில் பக்தர்கள் நன்கொடையாளர்கள் மலமும் அரசின் நிதி உதவி ஆகியவற்றுடன் வேலைகள் பூர்த்தி அடைந்தன.

புதிய மரத்தேர்கள் இரண்டு அம்மனுக்குத் தங்கக்கவசம், உற்சவர் சிலைகள், பூத கணங்கள், பைரவர், வீரபத்திரர், வீரமாத்தி, ஸப்த கன்னியர் ஆகிய சிற்பங்களும் புதிதாகச் செய்யப்பட்டன. அம்மன் அருள்வாக்கின்படி நந்தன. வருடம் தை மாதம் 10ந் தேதி அன்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டன. இக்கோயிலானது தற்கால முறைப்படிக் கட்டப்பட்டுள்ளது. மேச்சேரி ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் கீழ் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது (Marimuthu, 2022, Age 61, Personal Interview, Chennai, India).

## நம்பிக்கைகள்

மனித இனம் ஒன்றாகக் கூடிவாழும் சமுதாயத்தில் மக்கள் ஒருவரையொருவர் நம்பி வாழ்வதைப் போலவே தெய்வங்களையும் பெரிதும் நம்பி வாழ்கின்றனர். தெய்வங்கள் எப்போதும் தனக்கும், தனது குடும்பத்திற்கும் பாதுகாவலாக நிற்கும் எனும் நம்பிக்கைக் கொண்டுள்ளனர். இத்தகைய நம்பிக்கைகள் மானிட சமுதாயத்தில் புதிதாகத் தோன்றியதில்லை. காலங்காலமாகத் தலைமுறைத் தலைமுறைகளாகப் பின்பற்றப்பட்டு இன்றைய நிலையில் சிறப்புடன் திகழ்கின்றன. இந்த நம்பிக்கைப் பற்றி அவர்கள், "நம்பிக்கை என்பது உளவியல் அடிப்படையிலானது. மக்களுடைய உள்ளுணர்ச்சிகளின் வெளிப்பாடே நம்பிக்கை. இது ஒரு செயலின் காரணமாக அல்லது சூழ்நிலைக்குரிய பின் விளைவுகளைக் கொண்டதாகவும் மரபு வழியாகச் சந்ததிக்கு பின் சந்ததியினரால் கடைபிடிக்கும் ஒரு வழக்கமாகவும் உள்ளது" என்று குறிப்பிடுகின்றார் (Sanmugasundharam, 2001). மேலும் இந்நம்பிக்கைகளை மக்கள் பின்பற்றுவதன் நோக்கமே தங்களுக்கு நன்மை வந்து சேரவேண்டும் எனும் எண்ணமேயாகும்.

## வழிபாட்டு நம்பிக்கை

தெய்வத்தை வழிபடும் பொழுது ஏற்படும் நிகழ்வுகள் மீதும் பல நம்பிக்கைகளை மக்கள் கொண்டுள்ளனர். "தெய்வ வழிபாட்டிற்குத் தேங்காய் உடைக்கப்படும் பொழுது அழுகலாக இருக்கக்கூடாது. அவ்வாறு அழுகிப் போனால் குடும்பத்திற்கு தீமை வந்து சேரும் என்று மக்கள் நம்புகின்றனர்." முன்கூட்டியே வரவிருக்கும் தீமையினைத் தெய்வம் அறிவித்து விடுவதாக இதன்வழி நம்பப்படுகிறது (Manickkanaar, 1999). தெய்வ வழிபாட்டிற்கு உடைக்கப்படும் தேங்காய் இரண்டு சரிபாதியாக உடைந்தால் குடும்பத்திற்கு நல்லது எனவும் நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

## வாக்குக்கேட்டல்

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்களிடத்தில் பல நம்பிக்கைகள் இருந்தன. நற்செயல் கேட்டல் என்ற விரிச்சி கேட்டல் முறைகள் பரவலாக இருந்ததை,

"யாழ் இசை வண்டு ஆர்ப்ப நெல்லோடு

நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பு அவிழ் தூவம் கைதொழுது

பெருமது பெண்டிர் விரிச்சி நிற்ப"

என்ற முல்லைப்பாட்டு அடிகளால் அறிந்து கொள்ள முடிகின்றது. விரிச்சி கேட்கும் பெண்கள் நெல்லையும் மலரையும் எடுத்துச் சென்று கோயிலில் தூவி வழிபட்டு நிற்பர் (Sakthivel, 2010). அப்பொழுது அவ்வழியாக வருபவர்கள் தற்செயலாகச் சொல்லும் சொல்லை நற்சொல்லாக ஏற்றுக் கொள்வர். இதனுடைய வேறொரு வகை நம்பிக்கையாக மக்களிடையே சாமி கேட்டல் பூவாக்குக் கேட்டல் போன்றவை இன்றும் நடைமுறையில் உள்ளன. ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலிலும் பூவாக்குக் கேட்கும் நம்பிக்கை எல்லோரிடமும் உள்ளது.

பத்ரகாளி அம்மனை மனதில் நினைத்து வழிபட்டால் நினைத்தது நடக்கும் என்ற நம்பிக்கை சுற்றுப்புற மக்களிடையே மிகுதியாக உள்ளது.

பத்ரகாளி உருவச்சிலைக்கு முன் நடப்பட்டிருக்கும் வேல் முன் நின்று எலுமிச்சம்பழத்தை இடதுபுறமும் வலது புறமும் மூன்று முறை சுற்றி வேலில் குத்திவிட்டு வந்தால் நம் உடலில் உள்ள கை, கால், வலி, பில்லி சூனியம் போன்றவை நம் உடலைவிட்டு விலகும் என்பது மக்களின் நம்பிக்கை. அர்ச்சனை செய்த எலுமிச்சைபழத்தை வீட்டில் கொண்டு வந்து வைத்தால் சகல செல்வங்களும் வந்து சேரும் என்பது மக்களின் நம்பிக்கை. எலுமிச்சம்பழம் மாலை கோர்த்து போட்டால் தடைபட்ட காரியங்கள் கைகூடும், கிடாய்வெட்டி பொங்கல் வைத்தால் தொழில் சிறக்கும். ஆடு, மாடுகளுக்கு நோய் நொடி வராமல் இருக்கும் கன்றுகுட்டிகளை நேர்ந்து விடுவது மக்களின் நம்பிக்கை.

பத்ரகாளிக்கு அர்ச்சனை செய்தால் தீயது விலகி நல்லது நடக்கும். திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு பூவாக்கு கேட்கும் நம்பிக்கை மக்களிடையே உள்ளது. புதியதாக வாகனம் வாங்கியவர்கள் பத்ரகாளிக்கு பூஜை செய்து சென்றால் தொழில் நல்ல லாபம் கிட்டும் விபத்துகள் ஏற்படாமல் இருக்கும் என்ற நம்பிக்கை பெரும்பாலான மக்களிடையே உள்ளது (Nallappan, 2022, Age 68, Personal Interview, Chennai, India).

## ஸ்ரீ பத்ரகாளியம்மன் வழிபாட்டு முறைகள்

வழிபாடு என்னும் சொல்லுக்கு அறிஞர் பலர் பல்வேறு விளக்கத்தினை அளித்துள்ள போதிலும் அவை யாவும் இறைவனை நினைத்து வணங்குதல் என்னும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன. "வழிபாடு என்பதன் சொற்பொருள் கடவுள் வழியில் கடவுள் நெறியிற்படுதல் அல்லது சொல்லுதல் என்பதாகும்" (Kothandabanippilai, 1985).

எனக் கடவுள் நெறி நிற்பதே வழிபாடு எனப்படுகிறது. மேலும், இறைவனைக் காலையில் வணங்கினால் அவரவர்க்குள்ள துன்பம் நீங்கும். உச்சி வேளையில் வணங்கினால் கொடுமையான துன்பங்கள் அகலும், மாலை வேளையில் இறைவனை வணங்கினால் ஏழு பிறப்புகளில் செய்த தீமைகள் எல்லாம் நீங்கிவிடும். ஆகையால் மூன்று கால பூசைகள் செய்யப்படுகின்றன.

"கால சந்தி - காலை 8.00 மணி

உச்சிக்காலம்- மதியம் 12. 00 மணி

இராக்காலம் - மாலை 7. 00 மணி

அம்பிகையின் முன் தலைவணங்கி மனம், மொழி, மெய் மூன்றினையும் ஒரு வழி நிறுத்தி சக்தியின் புகழ்பாடி வணங்குதல் வேண்டும். சக்தி பீடங்கள் 108 அவற்றுள் ஒன்றாகப் போற்றப்படுவது மேச்சேரி நகரில் குடிகொண்டுள்ள ஸ்ரீ பத்ரகாளியம்மன் திருக்கோயில் ஆகும். இங்கிருந்து அம்பிகையின் அருளாட்சியில் உலகமெங்கும் காத்தும் துஷ்டர்களை எதிர்த்தும், பலவைகயான நன்மகளைச் செய்து வருகின்றாள். இக்கலியுகத்தில் ஸ்ரீபத்ரகாளி கண்கண்ட தெய்வமாய் வேண்டியவர்க்கு வேண்டிய அருள்வறை கண்கூடாகக் கண்டு மகிழலாம். அடியார்கள் செய்யும்

வழிபாட்டை ஏற்று அருள்பாலிக்கின்ற காட்சியை உணரலாம் (Chinnasamy, 2022, Age 55, Personal Interview, Chennai, India).

## சக்தி நோன்புகள்

1. சித்ரா பௌர்ணமி- சக்தி பூமிக்கு வந்து அருள் செய்வது
2. வடசாவித்திரி விரதம்- ஆடிப்பௌர்ணமியில் செய்வது
3. மங்கள கௌரி விரதம்- ஆவணி செவ்வாயில் செய்வது
4. வரலட்சுமி விரதம்- ஆவணி சுக்லதுதிகை சுக்ரவாரம்
5. நவராத்திரி விரதம்- புரட்டாசி ஐப்பசி
6. கேதாரி கௌரி விரதம்- தீபாவளி அமாவாசை நவராத்திரி முடித்து
7. விஜயதசமி விரதம்- புரட்டாசி, ஐப்பசி, சுக்லதசமி (Gopal, 2022, Age 50, Personal Interview, Chennai, India)

## காளிதேவியின் நாமங்கள்

பொன்காளி, செல்லியம்மன், பிடாரி அம்மன், எல்லைக்காளி, பச்சையம்மன், அங்காளம்மன், காசிவிசாலாட்சி, வங்காள மாநில காளி, கர்நாடகா சாமூண்டீஸ்வரி, தாய்மூகாம்பிகை, சோட்டாணிக்கரை பகவதி, கொங்கல்லூர் பகவதி, பெரிய பாளையத்து அம்மன், திருவச்சியூர் மதுரகாளி, வக்ரகாளி, நாகத்தம்மன், முண்டகக் கன்னியம்மன், உறையூர் வெக்காளி, சமயபுரம் மாரியம்மன், மலேசியா மகாமாரி, சிங்கப்பூர் காளி, பட்டுக்கோட்டை நாடியம்மன் உஜ்ஜயினி மாகாளி, இத் வரிசையில் மேச்சேரி வடபத்ரகாளியம்மன் அக்னி கபாலத்துடன் எட்டுக்கைகளுடன் அருள் பாலித்துக் காட்சியளிக்கின்றாள் (Maragadham, (2022) Age 55, Personal Interview, Chennai, India).

## காலவகைப் பூசை

காலத்தின் அடிப்படையில் வழிபாட்டு முறைகள் ஆறு வகையாகப் பிரிக்கப்படுகின்றது. இக்காலங்களை, "உஷத்தகாலம், காலசந்தி, உச்சிகாலம், சாயரட்சை, பிரதோஷம், அர்த்தசாமம்" என்று வரையறை செய்துள்ளனர் (Kannadasan, 1982). நம் முன்னோரான அவர்கள் குறிப்பிட்டுள்ளது இங்குச் சிந்திக்கத்தக்கது. மேச்சேரி பத்ரகாளி அம்மன் கோயிலில் காலசந்தி, சாயரட்சை ஆகிய இருகால வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது.

## காலசந்தி

பத்ரகாளி திருக்கோயிலில் அசைவ முறைப்படி வழிபாடு நடைபெறுகின்றது. இறைவனுக்கு நாள்தோறும் வழிபடும் வழிபாட்டிற்கு எண்ணெய்க் காப்பு, திருமஞ்சனம், பால், தயிர் பழவகையான பஞ்சாமிர்தம், தேன், விபூதி, பன்னீர், இளநீர், சந்தனம் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இறைவனுக்குத் திருநீராட்டு எனப்படும் அபிசேகம் செய்யப்படும் அமுது படைத்து, பழம், தேங்காய், தூபம், தாம்பூலம், குங்குமம், மலர், நெய், சந்தனம், தீபம், கற்பூரம், எண்ணெய், ஆரத்தி ஆகியன கொண்டு மலர், வில்வமாலைகள் சாற்றி காலை வழிபாடு செய்யப்படுகிறது. மடைப்பள்ளியில் தயாரித்த திருவமுதினைப் படைத்துத் தூப ஆராதனை செய்வர்.

காவை வழிபாடு பத்ரகாளி, உற்சவம், விநாயகர் முதலான அனைத்து கடவுளுக்கும் வழிபாடு செய்யப்படுகிறது. நாள்தோறும் காலை 5.30 மணியளவில் திருக்கோயில் நடை திறக்கப்படும். 6.30 மணி முதல் திருவாராதனமும், அர்ச்சனையும், அபிசேகமும் அலங்காரமும் நடைபெறும் இரவு 7 மணி வரை பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

## சாயரட்சை

பொழுது சாயும் நேரத்தில் நடத்தப்பெறும் வழிபாடு சாயரட்சை எனப்படும். காலை வழிபாடு நடத்தப்பெற்ற முறைப்படியே மாலை நேரப்பூசையும் நடத்தப்பெறும். நாள்தோறும் மாலை 5 மணிக்கு இறைவனுக்கு அபிசேகம் நடைபெறும். அப்பொழுது நல்லெண்ணெய், மஞ்சள், சந்தனம், பால், இளநீர், தயிர், பன்னீர், திருமஞ்சனத்தூள், ஆகியவைப் பயன்படுத்தப்படுகின்றன.

## சிறப்பு வழிபாடு

பத்ரகாளி கோயிலில் சிறப்பு வழிபாடு தமிழ் ஆங்கில வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், அமாவாசை, பௌர்ணமி, ஆடிப்பெருக்கு, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி தீபாவளி, திருக்கார்த்திகை, திருவாதிரை, தைமாத சங்கராந்தி, மாசி மாத தேரோட்டம் போன்ற மாதங்களில் சிறப்பு அபிசேகம் அலங்காரம் போன்றவைகள் நடைபெறுகின்றது (Sanmugam, 2022, Age 45, Personal Interview, Chennai, India).

## திருவமுது

இறைவனுக்கு கோயில் மடைப்பள்ளியில் தயாரிக்கப்படும் திருவமுதினைப் படைக்கின்றனர். மேலும் தேங்காய், பழம் முதலியவையும் படைக்கப்படுகின்றன. கோயில் அர்ச்சகர் இறைவனுக்குத் தேவையான திருவமுதினைத் தயாரிக்கிறார். பொங்கல், தயிர்சாதம், சுண்டல் போன்றவை திருவமுதாகப் படைக்கப்படுகின்றன.

பத்ரகாளியம்மன் கோயிலில் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதத்திலும் விழாக்கள் கொண்டாடப்படுவதுண்டு. அத்தகைய விழாக்களின் போது மக்கள் ஒன்று கூடி அதனைக் கொண்டாடுவர். பொருள் உதவி செய்வோர் சிலர், உடலுழைப்பைத் தருவார் சிலர் என்று பலரும் விழாவினில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அம்மனை பக்தியுடன் வணங்கி வருகின்றனர் (நாராயணன் :2022).

## முடிவுரை

நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்த மானிட சமுதாயம் இயற்கையின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாக வழிபாட்டு முறையினைப் பின்பற்றினர். தங்கள் வாழ்விடங்களைத் திட்டமிட்டுக் கட்டுவதனைப் போலவே திருக்கோயில்களையும் கட்டியுள்ளனர். திருவிழாக்கள் மக்கள் வாழ்க்கையில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. திருவிழாக்களின் வழியாகப் பிரிந்து கிடந்த சமுதாயம் ஒன்றிணைவதற்கு வாய்ப்பாக அமைகிறது. ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு சுற்றுவட்டார மக்கள் பயத்துடனும் நம்பிக்கையுடன் வழிபாட்டு முறைகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். திருக்கோயிலில் பூசைகள் செய்வதற்கும் சில விதிமுறைகளைக் கொண்டு அதனடிப்படையில் சிறப்பாகச் செய்து வருகின்றனர். ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்களில் சிறப்பான நாட்களாகக் கருதுகின்றனர். ஆடிமாதம் சிறப்பாகத் திருவிழா நடத்தப்படுகின்றது கோயிலின் வளர்ச்சியில் இத்தகைய திருவிழாக்கள் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றன.

## References


Kannadasan, (1982) Neanjuku Needi Arthamulla Hindu Matham, Kalaikaveri Vijaya pathippagam, Chennai, India.

Kothandabanippilai, K. (1995) Pathenen Keelkanaku, Mulai Nilaiyam, Chennai, India.

Manickkanaar, A. (1999) Maduraikanchi Pathupattu, Varthanamaan Pathippagam, Chennai, India.

Sakthivel, S. (2010) Naattuppura Eyal Aaivu, Manivasagar publications, Chennai, India.

Sanmugasundharam, S. (2001) Naattupup Deivangal, Kavya Publisher, Bangalore, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License